# **அரக்கோணம் நகராட்சி**
## **சிறப்பு நகர மன்ற கூட்ட அறிவிப்பு**

கூட்ட எண்.43 நாள்: 04.06.2026.

பொருள் : நகர மன்றக் கூட்டம் – அரக்கோணம் நகராட்சி – நாள்: 05.06.2026 வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு சிறப்பு நகர மன்ற கூட்டம் நடைபெறுதல் – அறிவித்தல் – சம்மந்தமாக.

**ooOoo**

அரக்கோணம் நகராட்சி நகரமன்றம் சிறப்பு கூட்டம் 05.06.2026 வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு டாக்டர்.பி.ஆர்.அம்பேத்கர் நகர மன்ற கூடத்தில், நகரமன்ற தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெறும் சிறப்பு கூட்டத்தில் நகரமன்ற துணை தலைவர் மற்றும் நகரமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**தங்கள் அன்பார்ந்த**

நகரமன்ற தலைவர்
அரக்கோணம் நகராட்சி

இடம் : அரக்கோணம் நகராட்சி
நாள் : 04.06.2026.

# அரக்கோணம் நகராட்சி
# சிறப்புக்கூட்டம்

2026–ஆம் ஆண்டு ஜூன் மாதம் 05.06.2026–ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு அரக்கோணம் நகராட்சியில் அலுவலக வளாகத்தில் உள்ள டாக்டர்.பி.ஆர்.அம்பேத்கர் நகரமன்ற கூட்டரங்கில் நகர மன்ற தலைவர் அவர்களால் நடத்தப்பட உள்ள சிறப்பு கூட்ட நடவடிக்கைகள்.

| | |
|---|---|
| **திருக்குறள்:** | **யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்<br>சாந்துணையுங் கல்லாத வாறு.** |
| **விளக்கம்:** | **கற்றவனுக்குத் தன் நாடும் ஊரும்போலவே வேறு எதுவாயினும் நாடாகும்; ஊராகும்; ஆகையால் ஒருவன் சாகும்வரையில் கல்லாமல் காலங்கழிப்பது ஏன்?.** |

**<u>பொருள் எண். 1</u>**

**<u>அரக்கோணம் நகராட்சி– திடக்கழிவு மேலாண்மை பணிகள் – தூய்மை இந்தியா திட்டம்</u>**

திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2026, 01/04/2026 முதல் நடைமுறைபடுததப்பட்டுள்ளது அதன்படி நகராட்சி பகுதிகளில் குப்பை உற்பத்தி செய்பவர்கள் (பொது மக்கள், வணிக நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் இதர நிறுவனங்கள்) தங்களது குப்பையை மக்கும் குப்பை, மக்காத குப்பை சுகாதார கழிவுகள் மற்றும் சிறப்பு கவனத்திற்குரிய கழிவுகள் என நான்கு விதமாக தரம்பிரித்து நகராட்சியிடம் வழங்க வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2026–ஐ தீவிரமாக நகராட்சி பகுதிகளில் நடைமுறைபடுத்துவதற்கு விரிவான வழிகாட்டுதல்களை, மத்திய அமைச்சகங்கள், மாநில அரசுகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாண்பமை உச்சநீதிமன்றம் வழங்கி உள்ளது. (உரிமையியல் மேல்முறையீட்டு எண் 6174/2023 மற்றும் சிவில் மேல்முறையீட்டு எண் 7728/2023 நாள் 29.04.2026).

நகராட்சி பகுதிகளில் சேகரமாகும் குப்பைகளை மக்கும் குப்பை, மக்காத குப்பை சுகாதார கழிவுகள் மற்றும் சிறப்பு கவனத்திற்குரிய கழிவுகள் என தரம்பிரித்து வழங்குதல், சேமித்தல் அதனை கொண்டு சென்று செயலாக்கம் செய்தல் மற்றும் பாதுகாப்பான முறையில் அப்புறப்படுத்துவதற்கு நகராட்சி பகுதிகளில் வார்டுகள் தோறும் நகரமன்ற உறுப்பினர்கள் தலைமையில் நகராட்சி பொறியாளர்/துப்புரவு அலுவலர்/துப்புரவு ஆய்வாளர்களை துணைத் தலைவர்களாகவும், நகராட்சி தூய்மை பணி மேற்ப்பார்வையாளர்கள், NGO(அரசுசாரா நிறுவனங்கள்), தூய்மை இந்தியா திட்ட பரப்புரையாளர்கள், குடியிருப்பு நலச்சங்க பிரதிநிதிகள் மற்றும் தன்னார்வ நிறுவனங்களை சார்ந்தோர் ஆகியோரை உறுப்பினர்களாக கொண்ட குழுக்களுடன், வார்டு பகுதிகளுக்கு சென்று 05/06/2026 முதல் 12/06/2026 வரை வீடுவீடாக சென்று குப்பையை நான்கு விதமாக தரம்பிரித்து வழங்கும் பொருட்டு பொதுமக்களிடையே தகுந்த விழிப்புணர்வினை ஏற்ப்படுத்துவதற்கு மாண்பமை உச்சநீதிமன்றத்தால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் இதன் ஒரு பகுதியாக உலக சுற்றுச்சூழல் தினம் 2026 முன்னிட்டு நகராட்சிகளில் 05.06.2026 அன்று சிறப்பு நகரமன்ற கூட்டத்தினை நடத்த அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

மேலும் வரும் 06.06.2026 முதல் களப்பணிகள் பார்வையிடுதல் 07.06.2026 முதல் 12.06.2026 வரை பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணிகள் தொடர்ந்து நடத்தவும், அது தொடர்பான கருத்துக்களை தெரிவிக்கவும் பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தவும் தங்களின் முழு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. மாண்பமை உச்சநீதிமன்றத்தால் வழங்கப்பட்டுள்ள உத்திரவு (உரிமையியல் மேல்முறையீட்டு எண் 6174/2023 மற்றும் சிவில் மேல்முறையீட்டு எண் 7728/2023 நாள் 29.04.2026ன் நகல் நகரமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண் 394/2026/எச்1)

நகரமன்ற தலைவர்
அரக்கோணம் நகராட்சி